# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.355/மா/2025**

**நாள்: 30 .06.2026**

V. குமார்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி
(2) ஆர். சரஸ்வதி
சென்னை–600 073. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 023, அயனாவரம், பரசுராம ஈஸ்வரன் கோயில் வடக்கு மாட வீதி, கதவு எண் 62/14 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. குமார் என்பவரின் 09.10.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.10.2025 அன்று பெறப்பட்டு 355/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 023, அயனாவரம், பரசுராம ஈஸ்வரன் கோயில் வடக்கு மாட வீதி, கதவு எண் 62/14 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. குமார் என்பவர் தனது 09.10.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"I humbly submit that I have lodged a complaint seeking intervention of this Hon'ble Forum to direct the Commissioner, Tambaram Corporation to take action against the unauthorized illegal construction at 2$^{nd}$ floor, No.7, Green Gates Apartment, Lakshimi Nagar Main Road, Manavalan Nagar Extn., Sembakkam, Chennai-600 073 based on my representation dated 22.02.2024 and 17.06.2025 under the Tamil Nadu Town Country Planning Act, 1971.

But the Commissioner till now not initiated a single steps as against the illegal construction in at 2$^{nd}$ floor, No.7, Green Gates Apartments, Lakshmi Nagar Main Road, Manavalan Nagar Extn., Sembakkam, Chennai-600 073. In which I have lodged a complaint on 31.07.2025 as against the Commissioner, Tambaram Corporation. Now I have received a letter vide letter No.1329/Ma/2025 dt.22.09.2025 seeking me to lodge complaint in attached format and I have sent the complaint as per your requirement.

Kindly do take action as against my complaint in which I am grateful to you."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 27.11.2025 மற்றும் 02.06.2026 நாளிட்ட கடிதங்களில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

<u>27.11.2025 நாளிட்ட அறிக்கை</u>

“செங்கல்பட்டு மாவட்டம், செம்பாக்கம் கிராமம், லட்சுமி நகர் மெயின் ரோடு, மணவாளன் நகர் விரிவு, கிரின் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு கதவிலக்கம் எண் 7ல் 2வது தளம் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வருவது தொடர்பாக தகவல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் இடத்தினை இவ்வலுவலக மாநகராட்சி நகரமைப்பு பிரிவு களப்பணியாளர்களால் நேராய்வு செய்யப்பட்டது.

மேற்காணும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35)–ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பிக்க கோரும் அறிவிப்பு 07.11.2025–ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கட்டிட உரிமையாளரிடமிருந்து எவ்வித முகாந்திரமும் பெறப்படாத நிலையில், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56–ன் உட்பிரிவு (2–A)-ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35) அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிட பயன்பாட்டினை இடித்து பழைய நிலைக்கு மாற்றி அமைக்க கோரும் அமலாக்க அறிவிப்பு 27.11.2025–ம் தேதியில் மாநகராட்சியின் நகரமைப்பு பிரிவு மூலம் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பு கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற புகார் மனுவின் மீது மாநகராட்சி நகரமைப்பு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கையின் விவரத்தினை உரிய இணைப்புகளுடன் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.’’

<u>02.06.2026 நாளிட்ட அறிக்கை</u>

“செங்கல்பட்டு மாவட்டம், செம்பாக்கம் கிராமம், லட்சுமி நகர் மெயின் ரோடு, மணவாளன் நகர் விரிவு, கிரின் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு கதவிலக்கம் எண் 7ல் 2வது தளம் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வருவது தொடர்பாக தகவல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் இடத்தினை இவ்வலுவலக மாநகராட்சி நகரமைப்பு பிரிவு களப்பணியாளர்களால் நேராய்வு செய்யப்பட்டது.

மேற்காணும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35)–ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பிக்க கோரும் அறிவிப்பு 07.11.2025–ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கட்டிட உரிமையாளரிடமிருந்து எவ்வித முகாந்திரமும் பெறப்படாத நிலையில், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56–ன் உட்பிரிவு (2–A)-ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35) அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிட பயன்பாட்டினை இடித்து பழைய நிலைக்கு

மாற்றி அமைக்க கோரும் அமலாக்க அறிவிப்பு 27.11.2025–ம் தேதியில் மாநகராட்சியின் நகரமைப்பு பிரிவு மூலம் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கட்டிட உரிமையாளர்களில் ஒரு நபர் மட்டும் கட்டிட அனுமதி பெற்றதற்கான உத்திரவு மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கட்டிட உரிமைதாரர்கள் கட்டிட அனுமதி பெற்றதற்கான உத்திரவு நகலை வழங்கிட இவ்வலுவலக, திருத்தப்பட்டதமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133 (5), 135 (1), (2)–ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர், முதல் எதிர்மனுதாரர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை–73, செம்பாக்கம், மணவாளன் நகர் விரிவு, லட்சுமி நகர் மெயின் ரோடு, கிரின் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு, 2வது தளம், கதவு எண். 7ல் வசித்து வரும் திருமதி ஆர்.சரஸ்வதி என்பவர் 2வது தளத்தில், தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கட்டிட திட்ட வரைபட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளார். இதுகுறித்து 22.02.2024 நாளிட்ட புகார் மனு தாம்பரம் மாநகராட்சியிடம் அளிக்கப்பட்டது. ஆனால், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நேரில் தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்றாலும் முறையான பதில் அளிப்பதில்லை.

எனவே, மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சட்டபூர்வமான அமலாக்க நடவடிக்கையும் விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத தாம்பரம் மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப் பொறியாளர் (திட்டம்) 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை–73, செம்பாக்கம், மணவாளன் நகர் விரிவு, லட்சுமி நகர் மெயின் ரோடு, கிரின் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு, 2வது தளம், கதவு எண். 7ல், வசித்து வரும் திருமதி ஆர்.சரஸ்வதி என்பவர் 2வது தளத்தில், அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது தொடர்பாக தாம்பரம் மாநகராட்சியால் நேராய்வு செய்யப்பட்டு, விதிமீறல் கண்டறியப்பட்டதால், அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட உரிமையாளருக்கு (இரண்டாம் தளம்) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35)–ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பிக்க கோரும் அறிவிப்பு 07.11.2025–ம் நாளிட்ட தேதியில் வழங்கப்பட்டது.

2. கட்டிட உரிமையாளரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் எவ்வித முகாந்திரமும் பெறப்படாத நிலையில் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56–ன் உட்பிரிவு (2–A)-ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35) அனுமதியின்றி

கட்டப்பட்டுள்ள கட்டிட பயன்பாட்டினை இடித்து பழைய நிலைக்கு மாற்றி அமைக்க கோரும் அமலாக்க அறிவிப்பு 27.11.2025–ம் நாளிட்ட தேதியில் மாநகராட்சியால் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

3. மேலும் கட்டிட உரிமையாளர்களில் ஒரு நபர் மட்டும் கட்டிட அனுமதி பெற்றதற்கான நகலை சமர்ப்பித்துள்ளதால், மீதமுள்ள தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகிய கட்டிட உரிமைதாரர்களுக்கு கட்டிட அனுமதி நகலை வழங்கிட 01.06.2026 அன்று திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 135 (5), 135 (1) (2)–ன் கீழ் ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி ஆர். சரஸ்வதி என்பவர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மேற்கண்ட முகவரியில் உள்ள கட்டிட உரிமையாளரின் வீட்டிற்கு பணிக்கு சென்றேன். எனது கணவர் இறந்து விட்ட காரணத்தினாலும், தங்குவதற்கு வீடு இல்லாமல் கஷ்டப்பட்ட நேரத்தில் மேற்கண்ட முகவரியில் உள்ள இரண்டாம் தளம் வாடகைக்கு குடிபெயர்ந்தேன். இரண்டாம் தளத்தின் உரிமையாளர் திரு. ரங்கநாதன் அவர்களின் பண தேவைக்காக இவ்வீட்டை எனக்கு விற்றுவிட்டார். ஆனால், எனக்கு இவ்வீட்டிற்கான கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கட்டிடத்தினை வரன்முறைப்படுத்த விண்ணப்பம் அளிக்கவுள்ளேன் என்ற விவரத்தையும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி. ஆர். சரஸ்வதி என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–73, செம்பாக்கம், மணவாளன் நகர் விரிவு, லட்சுமி நகர் மெயின் ரோடு, கிரின் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு, 2வது தளம், கதவு எண். 7ல் வசித்து வரும் திருமதி ஆர். சரஸ்வதி என்பவர் 2வது தளத்தில் உள்ள கட்டிடத்தினை தாம்பரம் மாநகராட்சியிடம் கட்டிட திட்ட வரைபட அனுமதி பெறாமல் கட்டியுள்ளார் என்பதும், இதுகுறித்து புகார் மனு தாம்பரம் மாநகராட்சியிடம் அளிக்கப்பட்டும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால், மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சட்டபூர்வமான அமலாக்க நடவடிக்கையும் விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத தாம்பரம் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–73, செம்பாக்கம், மணவாளன் நகர் விரிவு, லட்சுமி நகர் மெயின் ரோடு, கிரின் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு, 2வது தளம், கதவு எண். 7ல், வசித்து வரும் திருமதி ஆர்.சரஸ்வதி என்பவரது 2வது தளமானது அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது தொடர்பாக தாம்பரம் மாநகராட்சியால் நேராய்வு

செய்யப்பட்டதில் விதிமீறல் கண்டறியப்பட்டதால், அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள இரண்டாம் தளத்தின் கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35)–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டும், எவ்வித ஆவணமும் பெறப்படாததால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 உட்பிரிவு (2–A)-ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35) அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிட பயன்பாட்டினை இடித்து பழைய நிலைக்கு மாற்றி அமைக்க கோரும் அமலாக்க அறிவிப்பு கட்டிட உரிமையாளருக்கு தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், மேற்கண்ட அடுக்குமாடி கட்டிட உரிமையாளர்களில் ஒரு நபர் மட்டும் கட்டிட அனுமதி பெற்றதிற்கான நகலை சமர்ப்பித்துள்ளதால், மீதமுள்ள தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகிய கட்டிட உரிமைதாரர்களுக்கு கட்டிட அனுமதி நகலை வழங்குமாறு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 135 (5), 135 (1), (2)–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், அவற்றின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதல் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

சென்னை–73, செம்பாக்கம், மணவாளன் நகர் விரிவு, லட்சுமி நகர் மெயின் ரோடு, கிரின் கேட்ஸ் கதவு எண். 7–ல் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பின் 2வது தளத்தில் உள்ள கட்டிட உரிமையாளரின் வீட்டிற்கு தான் பணிக்கு சென்றார் என்பதும், தனது கணவர் இறந்து விட்ட காரணத்தினாலும், தங்குவதற்கு வீடு இல்லாமல் கஷ்டப்பட்ட நேரத்தில் மேற்கண்ட முகவரியில் உள்ள இரண்டாம் தளம் வாடகைக்கு குடிபெயர்ந்தார் என்பதும், இரண்டாம் தளத்தின் உரிமையாளர் திரு. ரங்கநாதன் அவர்களின் பண தேவைக்காக இவ்வீட்டை தனக்கு விற்றுவிட்டார் என்பதும், இவ்வீட்டிற்கான கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்ற விவரம் தனக்கு தெரியாது என்பதும், மேலும், இக்கட்டிடத்தினை வரன்முறைப்படுத்த விண்ணப்பம் அளிக்கவுள்ளார் என்பதும் இரண்டாம் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–73, செம்பாக்கம், மணவாளன் நகர் விரிவு, லட்சுமி நகர் மெயின் ரோடு, கிரின் கேட்ஸ் கதவு எண் 7ல் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பின் 2வது தளத்தில் வசிக்கும் திருமதி ஆர். சரஸ்வதி என்பவரது வீடு கட்டிட அனுமதி பெறாமல் விதிமீறி கட்டப்பட்டுள்ளது என்பது தாம்பரம் மாநகராட்சியால் கண்டறியப்பட்டு, அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள இரண்டாம் தளத்தின் மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35)–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டும், எவ்வித ஆவணமும் பெறப்படாததால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 , பிரிவு 56 உட்பிரிவு (2–A)-ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1972 பிரிவு 35) அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிட பயன்பாட்டினை இடித்து பழைய நிலைக்கு மாற்றி அமைக்க கோரும் அமலாக்க அறிவிப்பும் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்றும், மேற்கண்ட அடுக்குமாடி கட்டிட உரிமையாளர்களில் ஒரு நபர் மட்டும் கட்டிட அனுமதி பெற்றதற்கான நகலை சமர்ப்பித்துள்ளதால், மீதமுள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளம் ஆகிய கட்டிட உரிமைதாரர்களுக்கு கட்டிட அனுமதி நகலை வழங்குமாறு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 135 (5), 135 (1), (2)–ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முதல் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி சார்பாக ஆஜரான மண்டலம் 3–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள் தொடர்பான மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புரைகளை கருத்திற்கொண்டும்,

உரிய சட்டபூர்வ நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள்30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. V. குமார்,
கதவு எண் 62/14,
பரசுராம ஈஸ்வரன் கோயில்
வடக்கு மாட தெரு,
அயனாவரம், சென்னை–600 023.

(2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 3, தாம்பரம் மாநகராட்சி,
சென்னை

(4) திருமதி ஆர். சரஸ்வதி,
கதவு எண் 7, கிரீன் கேட்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு,
2வது தளம், லட்சுமி நகர் மெயின் ரோடு,
மணவாளன் நகர் விரிவு, செம்பாக்கம்,
சென்னை–600 073.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.
2/7/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032